| STC No.572/2024 | PW1: திரு.சுஹய்ப் | 23.03.2026 |
|---|---|---|

எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**(சாட்சி Crl.M.P.No. 73/2026 – 17.02.2026 தேதிய உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் 07.12.2021ம் தேதியன்று ஒப்பந்தம் போட்ட பிறகு தான் ரூ.2,00,000/–த்தை எதிரி திருப்பி செலுத்தினார் என்றால் சரிதான். எதிரி செலுத்த வேண்டிய தொகையான ரூ.2,00,000/–த்தை மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாதம் ரூ.10,000/– வீதம் செலுத்திவிட்டார் என்று சொன்னால் 04.06.2024ம் தேதியன்று செலுத்தி முடித்து விட்டார். 07.12.2021ம் தேதி முதல் 04.06.2024ம் தேதி வரை சுமார் 30 மாதங்கள் என்றால் சரிதான்.

2. மாதம் ரூ.10,000/– வீதம் செலுத்தியிருந்தால் 20 மாதங்களில் ரூ.2,00,000/– முடிந்திருக்கும் என்றால் சரிதான். எதிரி தொடர்ச்சியாக தவணையை செலுத்தாததால் தான் 30 மாதங்கள் காலமானது என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்பந்தத்தையும், காசோலையையும் திருப்பிக் கொடுத்துவிட்டதாக நான் சொல்லியிருந்தேன் என்றால் சரிதான்.

3. நான் ம.சா.ஆ.4 12.08.2024ம் தேதியிட்ட ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம்

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.23 19:02:52 +0530

காண்பிக்கப்படும் ம.சா.ஆ.4 அறிவிப்பில் காசோலை எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த அறிவிப்பு கிடைத்த பிறகு எதிரி எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

4. 27.08.2024ம் தேதியன்று எதிரி எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும், போலீசார் விசாரணையில் காசோலைகளை திருப்பிக் கொடுப்பதாக ஒத்துக் கொண்டேன் என்றாலும், ஆனால் காசோலைகளை எதிரியிடம் திருப்பித் தராமல் காசோலைகளை தவறாக பயன்படுத்தி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதிரி எனக்கு அனுப்பிய பதிலறிவிப்பை மறைத்து நான் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிலறிவிப்பை பெற்றுக் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.03.23 19:02:59 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**